# ஞானதீபம்.

புஸ்தகம். 1. | 1892—௵ புரட்டாசி ௴ 1 ௳ | இலக்கம்—2

ஆலிம்சாகிபவர்கள் கிறீஸ்த்துப் பாதிரி, பிராமணக்குரு, ஞுறுணஞானைசயாகிய மூவரும் அவரவர்கள் வேதங்களைப்பற்றிச் சொல்லியவைகளைக்கேட்டு, மறுமொழி சொல்லத தொடங்கினார்.

நபிமார்கள் தங்கள் சமானில் மனிதர்கள் எந்தெந்தக் கல்விகளில். அல்லது வித்தைகளில் மேலிட்டிருக்கிறார்களோ அந்தந்தக் கல்விகளை யல்லது வித்தைகளை மிகைக்கத்தக்க அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். மூசாநபியுடைய சமானில் சூனியம், ஜாலம், முதலியவைகளிற் சாமார்த்திய முடையவர்களா யிருந்ததால் அவைகளையெல்லாம் மேலிடத்தக்க அற்புதங்களை மூசாநபிசெய்தார்கள். ஈசா அலைகிஸ்ஸலாமுடைய காலத்தில், மனிதர்கள் வைத்திய சாஸ்த்திரத்திற் றேர்ச்சி யடைந்தவர்களா யிருந்ததால், அந்த நபி குஷ்டரோகிகளைச் சுகமாக்கினார்கள். செத்தவர்களை உயிராக்கினார்கள். எங்கள் நாயகம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய காலத்தில் அறபுதேசத்தில் அறபுப்பாஷை, மிகவுந் தேர்ச்சி யடைந்திருந்து. வாக்கலங்காரத்திலும, சாதுரியத்திலும், புலமையிலும் அறபிகளின் மிகவுஞ் சாமார்த்தியமுடைய வர்களிருந்தார்கள். வருடத்துக்கொருமுறை கஃபத்துல்லாவுக்குப் பற்பல தேசத்திலுமிருந்து கல்விமான்களும் புலவர்களும் வந்து கூடுவார்கள். சாமார்த்தியமுடைய புலவர்களின் பாடல்களை அங்கு கூடுகி

றசபை பரிசோதித்துப் பட்டங்கள் கொடுக்கப்படும் என்பது. அந்தக்காலத்தில் எங்கள் நாயகம் நபிசல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்களுக்கு அல்லாகுத்தஆலா குறுவானையே ஓர் அற்புதமாக அனுப்பிவைத்தான். மெஸ்தர், தெவன்போர்ட்டென்கிற துரை எழுதிய புத்தகத்தில் முகம்மதியவர்கள் குறுவானை அற்புதங்களில் மகாபெரிய அற்புதமாயும் செத்தவனை உயிராக்கிறதிலும் மஹா பெருமையான அற்புதமாயும் பேசுகிறார்கள். மோஸஸ் (மூசாநபி) காட்டிய அற்புதங்களும் (ஏசுநாதர்) ஈசாநபி செய்த அற்புதங்களும் அந்தந்த நேரத்துக்கே. குறுவானோ எக்காலத்திற்கும் தரிபாடான அதிசயிக்கத்தக்க அற்புதமாயிருக்கிறது. இதுபோலொரு அற்புதம் ஒரு காலத்திலும் ஒரு நபிமார்களுங் காட்டவில்லையென்றெழுதியிருக்கிறார்.

குறுவான் அல்லாகுத்தாலாவில் நின்றும் வெளியானதென்பதையும் நபிசல்லல்லாகு அலைஹிவஸல்லம அவனின் திருத்தூதரென்பதையும் அதாட்சிப்படுத்துவதற்காக அல்லாகுத்தாலா தானே குறுவானில் இது நாயனில் நின்றுமல்லவென்று சொல்லுகிற காபீர்களுக்கு இதுபோலொரு குறுவானைக் கொண்டுவரச் சொல்லுமென்றும், பின்பு பத்து சூறத்தாவது கோர்வைசெய்து கொண்டுவரச் சொல்லுமென்றும் பின்பு ஒரு சூறத்தாவது கொண்டுவரச் சொல்லுமென்றுஞ்சொன்னதுமல்லாமல் மனிதரெல்லோரும் ஜின்களும் ஒன்றாகச்சேர்ந்து இதுபோலொன்றைக் கோர்வைசெய்து கொண்டுவரச் சொல்லுமென்றுந் திருவுளம்பற்றியும் எவ்வளவோ அந்தக்காலத்தில் மஹா சமர்த்தையுடைய கல்விமான்களிருந்தும் ஒருவராலும் அதுபோலொரு அயத்தைக் கோர்வை செய்யக்கூடாமற் போயிற்று. குறுவானிறங்கி ஆயிரத்து முந்நூற்றுச் சொச்சம் வருடங்களாகியும் மனிதரால் அதுபோலொன்றுகோர்வைசெய்யக்கூடாதென்பதை சகலரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

குறுவானைக்குறித்து ஒரு பெரியோர்கள் சொல்லுகிறார்கள். குறுவான அற்புதமாயிருப்பது சொல்லின் அலங்காரமும் பேச்சின் மதுரமும், கருத்தின் மஹத்துவமும், வசன முடிவின் இராகமுமாயிருக்கும். அதைத் அறபுப் பாஷை தெரிந்தவர்கள் கேட்டவுடனே அதுமற்றும் அறபுக்கோர்வைகளுக்கெல்லாம் மேலானதென்பதை யறிந்துக் கொள்வார்கள். ஒவ்வொரு ஆயத்தும் அல்லது வசனமும் ஒரு பிரகாசமான மாணிக்கம் போலயிருக்கும். மிகவும் பிரகாசமான இரத்தினத்தைப் போலிலங்கும். அதின கோர்வையைப்போல் ஒருவராலுஞ் செய்யக்கூடாததால் குறுவான் வந்த நாள்முதல் இதுவரையுமுள்ள கல்விமான்கள் அதிசயிக்கிறார்கள். உமறுகத்தாபு றளியல்லாகுஅன்கு ஈமான்கொண்ட விதமாவது:—அவர்கள் நபிநாயகத்துக்கு நுபுவ்வத்து வந்து ஆறு வருடம் வரையும் நபிநாயகமவர்களுக்கும் ஈமான் கொண்டிருந்த முஸ்லீம்களுக்கும் குரூரமான சத்துருவாயிருந்தார்கள் அவர்கள் மிகவும் வீரியமும் பெலனுமுடையவர்கள் அவர்களுடைய சகோதரியாகிய பாத்துமா அவர்களும் மச்சினராகிய சயீது அவர்களும் இரகசியமாக இஸ்லாமாகி கு

காபிர்களுக்குப் பயந்து தாங்கள் இஸ்லாமானதை வெளியாக்காமலிருந்தார்கள். ஒருநாள் உமறு கத்தாபு சிலமுஸ்லீம்களை உறுக்கிக்கடுமை செய்யும்போது அவர்களுடைய ஒரு சிநேகிதன் உமறே நீங்கள் முதலாவது, உங்கள் சொந்தவீட்டை ஒழுங்குப் படுத்தத் துணியுங்கள் உங்கள் சகோதரியும் உங்கள் மச்சினனும் இஸ்லாமாகியிருப்பதை அறியுங்களென்று சொல்ல, அவர்கள் கடுங்கோபங்கொண்டவர்களாக வீட்டுக்கு வந்தார்கள். அந்த வேளையில் குபாப் என்கிறவர் தாஹா என்கிற சூறத்தைமெதுவாக வாசிக்க, பாத்தும்மாவும் அவர்கள் புருஷனும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உமறு கத்தாபு றளியல்லாகுஅன்கு அவர்களுக்கு மெதுவா யோதுகிறதுகேட்டுக் கதவைத் தட்டினார்கள். உமறுகத்தாபின் அரவத்தைக் கேட்டவுடன் குபாபு எழும்பி ஒரு அறையில் ஒழித்துக்கொண்டார். உமறுகத்தாபு இப்பொழுது எனக்குக்கேட்ட சத்தமென்னவென்று கேட்டபோது அவர்கள் ஒன்றுமில்லையென்று சொன்னார்கள். உமறுகத்தாப் இல்லை நீங்கள் வேதமாறிவிட்டீர்களென்று கேள்விப்பட்டிருக்கிறேனென்று அதட்டிச்சொல்ல, மச்சினன் உமறே உங்கள் மார்க்கமல்லாது வேறு உண்மையான மார்க்க மிருக்கக்கூடாதாவென்று மறுத்துப்பேச, உமறு கத்தாபின் கோபமீறி, மச்சினனின் பேரில் பாய்ந்து அடித்தார், சகோதரி விலக்கப்போனபோது அவர்களுக்கு முகத்தில் காயமுண்டாகி இரத்தமோடிற்று. அப்பொழுது பாத்தும்மா அவர்கள் ஓம் நாங்கள் நபிக்கு ஈமான் கொண்டுவிட்டோம் உங்களுக்குக்கூடியதைச் செய்யுங்களென்றார்கள். உமறுகத்தாப் சகோதரியின் முகத்தால் இரத்தமோடுவதைக்கண்டு கோபந்தணிந்து நீங்கள் வாசித்துக்கொண்டிருந்த காகிதத்தைத் தாருங்களென்று கேட்டார்கள். பாத்தும்மா அதைக் கையிலெடுப்பதற்கு நீங்கள் சுத்தமாகிக்கொள்ளவேணும் சுத்தமில்லாதவர்கள் தொடக்கூடாதென்று சொன்னார்கள் உமறு கத்தாப் சரீரத்தைச் சுத்திப்பண்ணிக் கொண்டுவந்து அந்தக் காகிதத்தைப்பெற்று வாசித்துக் கொண்டு வரும்போது கல்புருகி சந்தோஷம்பொங்கி என்ன அழகாயிருக்கின்றது! எவ்வளவு மேன்மையாயிருக்கின்றது! என்று சொல்லும்போது குபாபு அவர்கள் உமறே நேற்று நபிசல்லல்லாகு அலைகிஸ்ஸலாம் அல்லாகுத்தாலாவிடம் நாயனே இஸ்லாம் பெலப்படுகிறதற்காக உமறையல்லது அபூஜகிலை இஸ்லாமாக்கித் தாவென்று கேட்டது ஆக்கபூலாகி அல்லாகுத்தாலா உங்களைத் தன்னிடத்தே சேர்த்துக்கொண்டான் என்றுசொன்னார்கள். உடனே உமறு கத்தாப் நபிநாயகமிருக்கிற விடத்தைக்காட்டும்படி கேட்டு அங்கேவந்து கதவைத் தட்டினபோது குறைஷிகளுடைய இம்சைக்காகப் பயந்து கதவைப்பூட்டிக் கொண்டிருந்த முஸ்லீம்கள் பயந்து இடுக்கிட நபியுல்லா பயப்படாதையுங்கள் கதவைத் திறவுங்களென்று சொன்னார். அம்ஸா றளியல்லாகுஅன்கு அவன் நலவின் பேரில் வந்தால் நலவாயிருக்கும் அல்லாதவரையில் அவனை இரண்டாய் வெட்டிப்போடுவேனென்று வாளையுருவினின்றார்கள். உமறுகத்தாபு றளியல்லாகு வந்து கலிமாச்சொல்லி இஸ்லா

மானார்கள்.

உமறுகத்தாபு றளியல்லாகு அன்கூ மட்டுமல்ல அறபிகளில் மிகுதியானவர்கள் இஸ்லாமானது குறுவானின் அழகினாலும் மேன்மையினாலுமே குறிப்பாக நுபுவ்வத்துக்குப்பின் நபிநாயகம் அவர்கள் மக்கத்திலிருந்த பத்துவருஷத்திலும் குறுவானைக் கேட்பதினால் கல்பு திரும்பி ஈமான் கொண்டிருக்கிறார்கள். குறுவான் வந்தவுடன் அநேக புலவர்களுடைய வாய்கள் பொத்தப்பட்டுப் போய்விட்டது. நபிசல்லல்லாகு அலைகிவஸ்ஸல்லமுடைய காலத்தில் நாபிகா என்கிறவர் புலவர்களுக்கெல்லாம் மேலான புலவராகவும் புலவர்களுக்கெல்லாம் பட்டங்கொடுக்கிறவராகவுமிருந்தார். ஒருநாள் அறபில் இரு, தேசத்து இராசவாகிய நுஉமானுடைய மாளிகையில் அவரிருக்கும்போது லபீதைக்கண்டார் அவரப்பொழுது சிறுபராயமான ஒரு பையன் நுஉமான் அந்தப் பையனைப் பார்த்து பிள்ளையே உன் கண்ணைப் பார்த்தால் புலமையுடையவனைப்போல் தெரிகின்றது. நீ ஏதாகிலும் பாடியிருக்கிறயோ வென்றுகேட்க, லபீது ஒரு கவியைச்சொன்னார் அதைக்கேட்டு நுஉமான் உன்னுடைய கூட்டத்தவர்களுக்கு நீ மேலான புலவனென்று சொல்லிவிட்டு இன்னமொரு பாட்டுச்சொல்லும்படி கேட்டார். லபீது வேறொரு கவி சொன்னார் அப்பொழுது நுஉமான் நீ உன்னுடைய தேசத்திலுள்ளவர்களுக்கெல்லாம் முதலாவதானபுலவனென்று சொன்னார். பின்பு இன்னுமொரு பைத்துச்சொல்லென்று கேட்டபோது லபீது வேறொரு கவி சொன்னார் அதைக்கேட்டு உடனே நுஉமான் திகைத்து ஆச்சரியங்கொண்டு நீ புலவர்களுக்கெல்லாம் மேலான புலவன உனக்கு நிகரொருவருமில்லையென்று சொன்னார் லபீது நபிநாயகத்தின் காலத்திலே கீர்த்தி பெற்ற ஏழு புலவர்களிலொருவர் இவர் இஸ்லாமான நாள்முதல் பாடுவதைவிட்டுப் போட்டார். உமறுகத்தாபு றளியல்லாகு அன்கூ அவர்கள் காலத்தில் இஸ்லாமான புலவர்கள் இஸ்லாமானதின் பின்னால் சொல்லிய கவிகளையெல்லாம வரவழைத்தார்கள். அப்பொழுது லபீது குறுவானில் பகறு ஆறத்தில் தொடக்கத்திலுள்ள சில ஆயத்துகளை எழுதி இப்படிப்பட்ட ஆயத்துகளைக் கண்டவனாடத்துணிவானோ நான் குறுவானைக் கண்டபின் கவிசொல்வதை விட்டுப் போட்டேனென்றெழுதி அனுப்பினார்.

அபுல்அஉலா என்பவர் கீர்த்திபெற்ற வித்துவானும் புலவருமாயிருந்தார். இவர் பிறந்தது ஹிஜுறத்து 363 ம் ஆண்டில் அவர்கள் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் உமறுக்களும் உலமாக்களும் காளிமார்களுமா யிருந்தார்கள். அபுல் அஉலா மூன்றுவயதா யிருக்கும்போது அம்மைநோய் கண்டு இருகண்களும் குருடாகி விட்டன. ஆகிலும் சாமார்த்தியமுடைய உலமாக்களைக் கொண்டு கல்விகற்றுக் கொடுக்கப்பட்டு பதினொரு வயதில் பைத்துகள்பாடினார். இவர் பகுதாதுக்கு கலீபாவைத் தெரிசிக்கப்போனபொழுது மாளிகைக்குவெளியே ஒரு இடத்தில் குந்திக்கொண்டிருக்கையில் பாதையிற்போகிற ஒருமனிதன் இவரைக்காணாமல் வந்து முட்டி அவன் விழப்போகும்போது ஆரிந்த நாயென்றான், அபுல் அஉலா நாய்க்கு எழுபது பெயர்தெரி

யாதவன் தான் நாயென்று மறுமொழி சொன்னார் இதைக்கொண்டு அவரின் இல்மு எப்படிப்பட்டதென்று விளங்கிக் கொள்ளலாம்.

இவர் தற்பூர்ஸ் என்கிற ஊருக்குப் போய் அங்குள்ள பெரும் புத்தகசாலைகளிலுள்ள புத்தகங்களையெல்லாம்வாசித்து முடித்துவிட்டு லசீக்கிய்யா வென்கிற கிறிஸ்துச் சன்னியாசிகளிருக்கின்ற மடத்துக்குப்போய் அவர்களின் அக்கீதாக்களை விளங்கி ஆராய்ந்த பின் பிராமணர்களிடஞ்சென்று அவர்கள் ஞானங்களை படித்தார். அவர்களைகலைக்கியானத்தில் அல் அய்குவல்குகுன்என்று பெயர்வைத்து ஒருகித்தாபு கோர்வை செய்தார் அது நூறு ஜில்து அல்லது பாகத்தையுடையது அதிலொரு ஜில்தை ஒரு ஆலீம் வாசித்த பின இந்த ஒரு பாகத்தில் சகல இல்முகளும் அடங்கி யிருக்கின்றனவே மற்ற தொண்ணூற்றொன்பது பாகங்களிலும் என்ன எழுதி இருக்கக்கூடுமென்று புதுமையானார். இவர் காபிரென்றும் பலாசிபா வென்றும் வேதமொன்றையு மொப்புக்கொள்ளாதவரென்றும் சூபியென்றும் பலவிதமாகச் சொன்னாலும் சூபியாக்களிலொருவரென்பது பெலமான சொல்லாயிருக்கின்றது அவருடைய சீஷர்களிலொருவராகிய அபுனூ பதுகு சொல்லுகிறார். நானொருநாள் அவரிடம் போகையில் அவர் ஒரு அறைக்குள்ளிருந்து சில பலாசி பாக்களுடைய வைத்துகளைப் பாடிக்கொண்டிருந்தவர் ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விட்டுப்பின்பு குறுவானில் (இன்னபீதாவிகல ஆயத்துன் விமன்காப.) என்கிற ஆயத்தை ஓதி விட்டு பெருங்கூச்சலிட்டு கீழேவிழுந்து அழுதார். இப்படி வெகுநேரம் தரையில் அழுதுக் கொண்டிருந்த பின் தலையை யுயர்த்தி முகத்தைத் துடைத்துக்கொண்டு இப்படிச்சொன்னவன் எவ்வளவு வல்லமையுடையவன் ஓ! எவ்வளவு பரிசுத்தனாயிருக்க வேண்டுமென்று சொல்லியபின் நான் கதவைத் தட்டி உள்ளேசென்று உங்கள் முகம் பேதலித்திருப்பதென்ன வென்று கேட்டேன். அவரொன்றுமில்லை படைக்கப்பட்டவர்களின் சில பாட்டுகளைப் படித்தேன் பின்பு படைத்தவனின் பாட்டுகளைப் படித்தேனென்று சொன்னார்

இப்பொழுது மிசுறிலிருந்து வந்திருக்கிற பாஷாமார்களிலொருவராகிய மகுமூதுசமி பாஷா மிசுறில் முதன் மந்திரியாயிருந்தவர்கள் இந்த சமானில் கீர்த்திபெற்ற அறபுப் புலவர்களிலொருவர் அவர்கள் நம்மிடம் சொல்லியிருக்கிறார்கள். குறுவானில் சில பகுதிகளை எனக்கு வாசிக்கக்கூடாது வாசித்தால் சரீரம் பதறி நடுக்கமுண்டாகின்றது. இன்னம் சில சூறத்துகளை வாசிக்கும்போதெல்லாம் என் கண்ணால் கண்ணீர் சொரிகின்றது. என்று சொல்லியிருக்கிறார்கள். குறுவானின் இன்பத்தை யறிகிறதற்கு நகுவு மந்திக்கும ஆனீ ஆகிய இல்முகளைகற்றிருக்கவேண்டியது மல்லாமல் உமறு கத்தாபு றளியல்லாகு அன்கு வுடைய சொற்படிக்கு நபிசல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களுடைய சமானிலிருந்த அறபுப் பாடல்களையும் நன்றாயறிந்திருக்க வேண்டும்.

குறுவானைக் குறித்துச் சில ஐரோப்பியர்களுடைய கருத்தைச் சொல்லுகிறோம்,

சார் வில்லியம் மூயீரென்கிறவர் இஸ்லாமார்க்கத்துக்கு விரோதமாக ஒரு புஸ்தகமெழுதுவதை செய்திருக்கிறார் அதில் குறுவானின் பேச்சு தொடக்கத்தில் மலையிலிருந்து தெளிவான நீரோட்டம் வேகமாயும், கதியாயும் பாய்ந்தோடி விழுவதுபோலும் பின்பு கொஞ்சம் அமர்ந்து நடந்து ஓடி இடைக்கிடை ஆணைகளும் உறுக்குதல்களும் வருவது மலையிலிருந்து ஆறுவிழுவதுபோலும் மனதைத் தொளைத்து உறுதியுண்டாக்கும் மேலான கருத்துகளும் இடைக்கிடை நீர் பாய்ந்து பிரகாசித்து நுரைகிளம்பிச் சில சொற்களின் கருத்துகளை மறைப்பதுபோலுமுள்ள வல்லமையான கோர்வையென்று சொல்லியிருக்கிறார்.

கீர்த்திபெற்ற ஜர்மன் வித்துவானாகிய கூத் என்பவர் குறுவானைக் குறித்துச் சொல்லியிருக்கிறதாவது, குறுவானைத் துவக்கத்தில் தெளிவற்றதாய் வாசிப்பவர்களுக்குப் பிரியக்குறைவைக் கொடுக்கும். பின்பு அதின முகிறல் மனத்தைப் பிடிக்கும் கடைசியாய் அதின் அழகலங்காரம் தடுக்கக்கூடாத விதமாய் மனத்தைக் கவர்ந்து வசிடமாக்கிக் கொள்ளும்

குறுவானை ஒரு பாஷைக்குஞ் சரிபோல மொழிபெயர்க்ககூடாது அப்படி மொழிபெயர்த்தால் அதினுடைய அழகும் இன்பமும் குறைந்துபோகும் குறுவானைக் கூடிய மட்டிலும் இருத்தமாய் இங்கிலீசில் மொழிபெயர்த்த சேல்ஸ் என்கிறவர் சொல்லியிருக்கிறார். குறுவானுடைய வாசகம்மிகவும் அலங்காரமும் மதுத்துவமுமுடையது நான் எவ்வளவோ தெண்டித்தும் அந்த அறபியிலுள்ள விதமாய் இங்கிலீசில் எழுதக்கூடாமற் போயிற்று. ஆகையால் நான் எழுதியிருப்பதுபோலவே அறபியிலிருக்கின்றதென்று வாசிக்கிறவர்கள் நினைக்கப்படாதென்று எழுதியிருக்கிறார்

எப்படிப்பட்ட கல்விமான்கள் கோர்வைசெய்த புத்தகங்களையும் இரண்டு மூன்று முறை வாசிக்கும் பொழுது சடைப்புதவிக்கும் குறுவானை ஒவ்வொரு நாளும் துன்யாவில் கோடிக்கணக்கான பெயாகள் இன்பமாயும் சந்தோஷமாயு மோதிவருகிறார்கள் இன்னம் இலக்ஷக்கணக்கான பெயர்கள் குறுவான் முழுவதையும் மனப்பாடம் பண்ணிக்கொண்டு ஓதிவருகிறார்கள். சில பெரியோர்கள் ஒவ்வொரு நாளும் குறுவான் முழுவதையும் ஒருமுறை யோதி முடிக்கிறார்கள். இப்படிபபட்ட புதுமையான ஓர் புத்தகம் உலகத்தில் வேறு இருக்கின்றதா

இன்னம் குறுவானைப்பற்றி கிப்பன் என்கிற கிறிஸ்த்துச் சரித்திரன் சொல்லியிருக்கிறதாவது. முஸ்லீம்களுடைய தேசங்களெல்லாவற்றிலும் குறுவானே மார்க்கச்சட்டங்களுக்கு அடித்தளமாகவும் மனிதர் நடக்கவேண்டிய நன்னெறிகளின் சட்டங்களாகவும் வியாபாரத் தொழில், நீதிசாஸ்த்திரம், முதலியவைகளுக்கெல்லாம் நீதிபுத்தக மாகவும் மனிதர்களின் நபுசுடைய சலாமத்து முதல் மனிதனின் சுகத்துக்குரிய காரியங்களுமிருக்கின்றனவென்று சொல்லியிருககிறார்

இப்படிப்பட்ட புதுமையான புத்தகம் உலகத்தில் வேறிருக்கின்றதா.

குருமார்களே! எங்கள் நபிநாயகம் குறுவானை வெளியாக்கின காலமுதல் இதுவரையுமுள்ள கல்விமான்கள் ஐரோப்பிய வித்துவான்கள் சகலரும் குறுவானைப்போலொரு கோர்வை ம

ஷீதராற் செய்யக்கூடாதென் றேற்றுக்கொள்வதால், எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகிய நபிநாயகத்தின சொந்தக் கோர்வை யென்றுசொல்ல, நியாயமிருக்கின்றதா? இல்லையென்றால் அது அல்லாகுத்தாலாவா லிறக்கப்பட்டதென்பதற்கு என்ன சந்தேகமிருக்கின்றது. குறுவான் அல்லாகுத்தாலாவால் இறக்கப்பட்டதென்றால், அதைவெளியாக்கினவர்கள் அல்லாகுத்தாலாவுடைய றசூலென்று ஒப்புக்கொள்ளாம லிருக்க நியாயமுண்டா? நான் காட்டிய நியாயங்களுக்கு மறுமொழி தராதவரையில் எங்கள் குறுவான், அல்லாகுத்தாலாவால் இறக்கப்பட்ட அவன் கலாமென்றும், நபிகல் லல்லாகு அலைகிவஸல்லம அவனின் திருத்தூ ரென்றும் நீங்க ளொப்புக்கொண்டு கலிமாச்சொல்ல வேண்டுமென்றுசொல்லிமுடித்து, ஆலீம்சாகிபு திருமபவும் கிறிஸ்துப் பாதிரியைப் பார்த்து, நானிப்பொழுது தாங்கள் காட்டிய நியாயங்களுக்கு மறுமொழி சொல்லப்போகிறேன்.

போதகரே! தாங்கள் இஞ்ஜீல் வேதம் அல்லாகுத்தாலாவா லிறக்கப்பட்டதென்பதையும், ஈசா அலைகிஸ்ஸலாம் அல்லாவுடைய றசூலென்பதையும் குறுவானைக்கொண்டு அத்தாட்சிப்படுத்தியிருக்கிறீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் குறுவானில்தானே, கிறிஸ்தவர்கள் இஞ்ஜீல்வேதத்தை வேறுவிதப்படுத்தி விட்டார்களென்றுஞ் சொல்லியிருக்கிறதே. குறுவானைக்கொண்டு உங்களுக்கு சார்வாயிருப்பதை யெடுத்துக் கொள்ளுகிறதும் விரோதமானவைகளைத் தள்ளிப்போடுகிறதும் நியாயமா? ஆனால் நான் நீங்கள் வேதமென்று கொண்டாடுகிற புதிய ஏற்பாடு, அல்லாகுத்தாலாவால் வெளியாகின இஞ்ஜீல்வேதமல்லவென்பதை நிச்சயமாய் ரூபித்துக் காட்டுகிறேன்.

நீங்களிப்போது வேதமென்று சொல்லுகிற புதிய ஏற்பாடு, ஈசா அலைகிஸ்ஸலாமவர்களுடைய சிஷர்களாகிய மத்தேவு, மார்க்கு, லூக்கா, யோவான் பாவுல் முதலியவர்கள் பற்பல ஊர்களுக்கு எழுதிய கடிதங்களையும், ஈசாநபியுடைய சரித்திரத்தையும் வெவ்வேறாக எழுதிய புத்தகங்களையுஞ் சேர்த்து ஒருபுத்தகமாய் வைத்துக்கொண்டு, இது அல்லாகுத்தாலாவுடைய கலாமென்றும், ஈசா அலைகிஸ்ஸலாமுடைய இஞ்ஜீல் வேதமென்றும் எப்படிச்சொல்லலாம? அந்தச் சிஷர்களுக்கு அல்லாகுத்தாலாவுடைய வஹி அல்லது பரிசுத்த ஆவியின் சகாயமுண்டாகி அவர்கள் எழுதினார்களென்று நீங்கள் சொல்வீர்களானால், அவர்கள் நபிமார்களாயிருக்கவேண்டுமே, நீங்களவர்களை நபிமார்களென்று சொல்லவுங் காணோமே. அவர்கள நபியானால், ஈசா அலைகிஸ்ஸலாமுடைய வேதமல்ல, மத்தேவு, மார்க்கு முதலிய சிஷர்களுடைய வேதமென்றல்லவா சொல்லவேண்டும். இன்னும் அந்தப் பெயர்கொண்டவர்களெழுதியதுமல்ல, அவர்களிடங்கேட்டு ஆரோ இன்னாரென்று தெரியாதவர்கள் எழுதினார்களென்று, கிறிஸ்தவர்களே சொல்லுகிறார்கள். ஈசாநபியின் சரித்திரமென்று பெயர்வைத்து நீங்கள் வைக்கிறவ ரெழுதிய புத்தகம் 8ம், பக்கத்தில் மத்தேவு, மார்க்கு, லூக்கா, யோவான் என்று பெயரிட்டு எழுதியிருந்தாலுமவர்களே அவைகளை எழுதினார்களென்று நினைக்

கவிடமில்லை அவர்களுடைய சொல்லின் படிக்கொண்டு வேறுமனிதர் எழுதினதாகவொன்று. முற்காலத்திலிருந்த கிறிஸ்தவர்களின் எண்ணமென்னவென்றெழுதியிருக்கிறார். இதைப்பார்த்தால், இது அல்லாவுடைய கலாமுமல்ல, ஈசா அலைகிஸ்ஸலாமுடைய இஞ்ஜீல் வேதமுமல்ல, அவர்களின் சீஷர்களுடையவுமல்ல, பெயர் தெரியாதவர்களுடைய வேதமென்றல்லவா சொல்லவேண்டும். இதுவல்லாமல் காலஞ் செல்லச்செல்ல, அந்தப்புத்தகங்கள் பலவிதமாய் வித்தியாசப்பட்டுக் கிறிஸ்தவர்களுக்குள்ளே விசுவாசங்களும் வேறுவிதப்பட்டு, சிலப் பிதா, மகன், தாய் மூவருஞ் சேர்ந்த திருத்துவக் கடவுளென்றும், சிலர் பிதாமட்டுந்தானென்றும்விசுவாசங்கொண்டும், இன்னுஞ் சிலர் விக்கிரகங்களை வணங்கிறவர்களாகவும், மஹாத்மாக்களை வணங்கிறவர்களாகவும் ஒருவரோடொருவர் விரோதித்துச்சண்டை செய்து வருங்காலத்தில் ஆண்டில் இஸ்தம்பூலில் அரசாண்ட, கொன்ஸ்டன்டைன் என்கிற இராசா பற்பல தேசங்களிலும் பலவிதமாய்க்கிறிஸ்தவர்களின் வேதப்புத்தகங்களிருந்தமையால் அவைகளையெல்லாம் வரவழைத்துப்பார்த்ததில், நூற்றுச் சொச்சம் புத்தகங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்தன. அவைகளையெல்லாமொன்றாயடுக்கி, அதில கொன்ஸ்டன்டின் ஒருசம்பாலடிக்க, அந்த அடிக்குவிழுந்த நாலு புத்தகங்களை மட்டும் எடுத்து, அவைகளையே சரியான வேதபுத்தகமென்றேற்று, அதுமுதல் அவைகளையே வேதமென்று கொண்டாடப்படுகின்றன. ரோமான், கதோலிக்கப்பிரிவார் இன்னமுஞ் சில புத்தகங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். புரோட்டஸ்டன் என்கிற பிரிவார் சில புத்தகங்களைக் கட்டிக்கொண்ட பொய்யான புத்தகங்களென்று, தள்ளிப் போட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகங்களை இன்ஜீல் வேதமென்று எப்படிச் சொல்லுகிறது.

நம்முடைய குறுவானோ கபீசல்லல்லாகு அலைகிவஸல்லம் வெளியானவிதமே மாசுமறுவற்ற இரத்தினம்போலாயிருக்கின்றது. அவைகளை அந்தந்த வேளையே, எழுதிவைத்தும் அனேகர் மனப்பாடம் பண்ணியுமிருந்து, நாயகமவர்கள் மவுத்துக்குச் சொற்பகாலத்துக்குப்பின், உமறுகத்தாபு றளியல்லாகு அன்கு அவர்களுடைய கிலாபத்தில் கோர்வைசெய்து முடிக்கப்பட்டு, அதுமுதலிதுவரையும மஷ்ரிக்கு முதல் மஃரிபு வரையுமுள்ள குறுவான்களெல்லா மொரேவிதமாயிருக்கின்றன. சில விடங்களில் சவரு சேருமளில், கிறுஅத்து வித்தியாசமல்லாமல் ஒரு சொல்லாவது வித்தியாசமில்லை.

இன்னும் போதகரே இன்ஜீல் வேதத்தில் அல்அபு வல்இபுனு, வல்உம்மு என்று சொல்லியிருக்கிறதாக, எங்கள் கித்தாபுகளிலிருப்பதை அத்தாட்சியாக எடுத்து, திருத்துவக் கடவுளென்பதற்கு அத்தாட்சி காட்டியிருக்கிறீர்கள். இதைக் குறித்து மகா கீர்த்திபெற்ற இன்ஸான்காமில் என்னுங் கிதாபைக்கோர்வைசெய்த அப்துலகரீமுலஜைலீ றளியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)